

# தொடர்புமூலம் வலிமை பெறுதல்

BONDS MAKE YOU STRONG



# உள்ளடக்கம


பக்கம்

முன்னுரை 1

நான் வலிமை பெறுவதை விரும்புகிறேன், அதற்காக எனக்கு... 2

...தொடர்பும் உடல் ரீதியான அருகாமையும் 4

...அரவணைப்பும் நம்பிக்கையும் 6

...பாசங்காட்டுதலும் கலந்துரையாடலும் 8

...ஒரு திடமான நெருங்கிய உறவு 10

...எனது தனித்துவத்தை அங்கீகரித்தல் 12

...எனது திறமைகளில் நம்பிக்கை 13

...வளர்ச்சியைத் தூண்டுவிக்கும் ஒரு சூழல் 14

...திசை நோக்குதல் 16

தேவை

விளக்கங்கள் 18

தொடர்பு மூலம் பலம்: தாய், தந்தைக்கு என்ன அவசியம்? 19

பெற்றார்கல்வி – சுவிற்சலாந்து 20

ஜாகோப்ஸ் தர்ம ஸ்தாபணம் 20

பிரியோசனமான இணையத்தளப்பக்கங்கள் 21

# முன்னுரை

ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் தொடர்பு என்பது அதன் வளர்ச்சிக்கு அடிப்படையாகும். முதல் நாள் தொடக்கம். அனைத்து வளர்ச்சிக்கான செய்முறைகளும் குறைந்தது ஒரு தொடர்பிற்குரிய ஆளுடன் உள்ள பிள்ளையின் தொடர்பின் அடிப்படையில் அமைந்திருக்கும்.
ஒரு தொடர்பை உருவாக்கும்போது என்ன அவதானிக்க வேண்டும் என்பதை, உங்களுக்கு இந்த கையேட்டில் காண்பிக்கிறோம். இந்த கையேடு கைக்குழந்தைகளுக்கும் சிறு பிள்ளகைளுக்கும் அடுத்து நிற்கும் தொடர்பிற்குரிய ஆட்களுக்கு எட்டு தகவல்களை, ஒரு பிள்ளைக்கு ஆரம்பத்திலிருந்து வலிமை பெறுவதற்காக என்ன தேவை என்பது சம்பந்தமாக, கொடுக்கிறது.

இதன் அடிப்படையில், தொடரும் வருடங்களில் சந்திக்கவேண்டிய சவால்களையும் வளர்ச்சி கருதிய செயற்பாடுகளையும் திறம்பட மேற்கொள்ளுவதற்கான தேவையான உதவிக்கருவிகளை பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றன.

”நான் வலிமை பெறுவதை விரும்புகி

...தொடர்பும் உடல் ரீதியான அருகாமையும்

...அரவணைப்பும் நம்பிக்கையும்

...பாசங்காட்டுதலும் கலந்துரையாடலும்

...ஒரு திடமான நெருங்கிய உறவும்

...எனது தனித்துவத்தை அங்கீகரித்தலும

...எனது திறமைகளில் நம்பிக்கையும

...வளர்ச்சியைத் தூண்டுவிக்கும் ஒரு சூழலும்

...திசை நோக்குதல்

தேவை”

றன், அதற்காக எனக்கு ...



# „நான் வலிமை பெறுவதை விரும்புகின்றேன், அதற்காக எனக்கு…
# …தொடர்பும் உடல் ரீதியான அருகாமையும் தேவை"

நான் உலகத்திலுள்ளேன். நான் சுவாசிக்கின்றேன். இப்பொழுது நான் புதிய விடயங்களைத் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருக்கின்றேன், அத்துடன் எனது சூழலுடன் தொடர்பில் நிற்க ஆசைப்படுகின்றேன். இதன்மூலம் எனது எதிர்கால வளர்ச்சிற்கான பலதரப்பட்ட அவசியமான உத்வேகங்களைப் பெறுகின்றேன்.

- பிறப்பிற்கு முன்பே எனது பெற்றோரின் குரல்கள் எனக்குப் பிடிக்கும், அத்துடன் எனது தாயின் வயிறைத் தடவினாலும் எனக்கு பிடிக்கும்.
- நான் எனது பெற்றோருடன் தோ;டான தொடர்பை விரும்புகிறேன் ஆம், அது எனக்குத் தேவையும்கூட.
- மொழியில்லாமல் கூட நான் எப்படி இருக்கின்றேன் என்பதை வெளிகாட்டுவேன், என்னை விளங்கிக்கொள்வதை விரும்புகின்றேன்.
- வழியின்போது எனது அம்மாவுடனோ அல்லது எனது அப்பாவுடனோ பார்வைத்தொடர்பை மேற்கொள்ளுவதை விரும்புகின்றேன்.
- எனது அம்மாவும் எனது அப்பாவும் என்னுடன் நேரம் செலவிடுவதை நான் விரும்புகின்றேன், அந்தவகையில் எனக்கு வழங்கப்பட்டச் சந்தர்ப்பத்தில் பதிலளிக்க விரும்புகின்றேன்.

- தாயின் கருவறையிலேயே இன்னும் பிறக்காத அந்த குழந்தை வெளிச்சூழலின் அபிப்பிராயத்தைப் பெறுகின்றது. அக்குழந்தை பெற்றாரின் குரலைக் கேட்டவுடன் அவர்களுடன் தொடர்பை கையாளுகின்றது.
- சற்று முன்பு பிறந்த குழந்தை தன் பிறப்பிற்கு பின் தனிமையை அனுபவிக்காமல் இருப்பதற்காகவும் கைவிடப்பட்ட உணர்ச்சியைப் பெறாமல் இருப்பதற்காகவும், அக் குழந்தையை உடனடியாக தாயின் வயிற்றில்மேல் கிடத்துவது மிகவும் அவசியாமாகும். இந்த தோலுடன் தோல் தொடர்பு உணர்ச்சிகரமான தாய் பிள்ளை எனும் உறவிற்கு நிறையவே பங்களிற்கின்றது. இந்த உடல்ரீதியான தொடர்பு ஆரம்ப மாதங்களில் மிகவும் அவசியமானவை.
- ஒரு கைக்குழந்தை அழுவதன் மூலமும், குழந்தையொலிகளின் மூலமும், முகபாவங்களின் மூலமும், அசைவுகளின் மூலமும் அதன் சுகத்தை சூழலுக்கு வெளிப்படுத்துகின்றது. ஒரு குழந்தை அழுகின்ற வேளையில், அதன் தாய் அல்லது தந்தை உடனடியாக அதனைக் கவனிப்பார். இதன் மூலம் அவர்கள் அக்குழந்தைக்கு தாம் அதற்காக இருக்கின்றோம் என்பதையும் அதனைத் தனிமையில் விடமாட்டார்கள் என்பதையும் காண்பிக்கின்றார்கள். அவர்கள் அக்குழந்தைக்கு பாதுகாப்பை வழங்குகின்றார்கள், அந்த வகையில் அக்குழந்தை அடுத்தடுத்த முறைகளில் காத்திருக்கக் கற்றுக்கொள்ளுகின்றது.
- குழந்தை தள்ளு வண்டியில், குழந்தை காவுத்துணிக்குள் அல்லது குழந்தை காவுப்பைக்குள் குழந்தை செல்லும்போது, அதன் முகத்தை தாயின் அல்லது தந்தையின் முகத்தை நோக்கி வைத்திருந்துகொண்டு அந்த வகையில் தனக்கு பழக்கப்பட்ட ஒரு ஆளுடன் தொடர்பை வைத்திருந்தால், அக்குழந்தைக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். குழந்தையை தூக்கும்பொழுது இடுப்பில் பக்கவாறாக இருத்தித் தூக்குவதே மிகச் சிறந்த முறையாகும். இதன் மூலம் அக் குழந்தையே தனது தொடரப்பிற்குரிய ஆளையோ அல்லது சூழலை

பார்த்து இரசிப்பதோ என்பதை தீரமாணிக்கக்கூடியதாக இருக்கும். அக் குழந்தை தனது தொடரப்பிற்குரிய ஆளைக் காணமுடியாவிட்டால், அறிமுகமற்ற, விசித்திரமான அபிப்பிராயங்களின் மூலம் நிச்சயமற்ற ஒரு நிலையை அடைந்து, தான் தனிமையில் உள்ளது என்னும் உணர்வை பெற்றுக்கொள்ளக்கூடும்.

- கர்ப்பத்தின்போது குழந்தையுடன் ஏற்படுத்திக்கொண்ட தொடர்பை, தாயும் தந்தையும் அதன் பிறப்பிற்கு பின் பேசுதல் மூலமும், கதைகள் கூறுவதன் மூலமும், பாடுதல் மூலமும், சிரிப்பதன் மூலமும் தொடரவேண்டும். இதன்மூலம் குழந்தைக்கு முகபாவனையினூடாகவும் சைகைகள் மூலமாகும் அவர்களுடன் தொடர்புகொள்ளுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றார்கள். பார்வை வேறு திசையை நோக்கிச் சென்றால், தனக்கு ஒரு இடைவெளி வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது: அது தான் சற்று முன்பு கண்டறிந்ததை முதலில் கிரகிக்கவேண்டும். பெற்றார் தமது குழந்தையின் சுகத்தை விசாரிக்கும்போது, அக் குழந்தை சொற்களினூடாக பதிலளிக்காது, அது திருப்தியான முகத்தோற்றத்தின் மூலம், ஒருவகையான சப்தத்துடன் பதிலளிக்கும். அதற்கு உங்களின் அக்கறையுள்ள, அன்பான குரலோசையே விளங்கும்.



# „நான் வலிமை பெறுவதை விரும்புகின்றேன், அதற்காக எனக்கு... ...அரவணைப்பும் நம்பிக்கையும் தேவை"

கைக்குழந்தையாகிய, சிறு குழந்தையாகிய நான், எனது வளர்ச்சி நன்றாக அமைய, வரையறுக்கப்படாத பாதுகாப்பும் நம்பிக்கையும் அனுபவிக்க விரும்புகின்றேன்.

- நான் அரவணைப்பையும் பாதுகாப்பையும் அனுபவிக்க விரும்புகின்றேன்.
- நான் எனது நிலமையைத் தனித்துவமாக மாற்றுவது சாத்தியமில்லை. அதனால் நான் கேட்கும்போதெல்லாம் எனக்கு பாசங்காட்டுதலும் பாதுகாப்பும் தேவை.
- என்னுடன் நுணக்கமாக அணுகும் ஒரு தொடர்பிற்குரிய ஆள் எனக்கு தேவை.
- நான் அனைத்து புலன்களினூடாக அவதானிக்கின்றேன். அந்தவேளைகளில் நான் பெற்ற உணர்வுகள் எனது முழு வாழ்க்கையிலும் என்னுடன் கூடச்செல்லும்.
- சில வேளைகளில் என்னை அமைதிப்படுத்துவது மிகவும் கடினமாக இருக்கும். அவ்வேளைகளில் எனக்கு அளவிற்கதிகமாக நம்பிக்கையும் பாதுகாப்பும் அவசியம்.

- பாதுகாப்பு, நம்பிக்கை, அரவணைப்பு போன்ற ஆசைகள் இயற்கையான, ஒவ்வொரு மனிதனுக்குள் உள்ள, ஒரு தேவை. ஒரு தாயின் கைக்குள்ளோ அல்லது தொடர்பிற்குரிய ஆளின் கைக்குள்ளோ ஒரு கைக்குழந்தை அரவணைப்பையும் பாதுகாப்பையும் பெறுகின்றது. அதற்குள்ளிருந்து ஒரு புதிய, அதற்கு அந்நிய, பழக்கமற்ற ஒரு உலகத்திற்குள் நுழைவது நன்றே.
- கைக்குழந்தைகள் தமது உணர்வுகளை சுயமாக ஒழுங்கபடுத்த பழகுவன, ஆனால் எப்பொழுதும் அதனை தனித்துவமாக கையாளமாட்டார்கள். அத்துடன் தமது சொந்த நிலமையை தனித்து மாற்றமாட்டார்கள். சிணுங்கும் அல்லுது அழும் கைக்குழந்தைகளுக்கு உடனடியாக பாதுகாப்பும் அரவணைப்பும் வழங்கும் ஒரு தொடர்பிற்குரிய ஆள் தேவை. சிணுங்கும் அல்லது அழும் கைக்குழந்தைகள் கண்டிக்கப்படவோ அல்லது அவர்களுக்கு அன்பையோ பறிக்கப்படுவதோ கூடாது. இது பிள்ளையின் வளர்ச்சிக்கு ஆபத்தானது. ஒரு பிள்ளையின் முதல் மாதங்களில் உணர்வுபூர்வமான தொடர்பு வளர்க்கப்படுகின்றது. இது 3 அம்சங்களை கொண்ட ஒரு தொடர்பிற்குரிய ஆளினூடாக நடைபெறவேண்டும், சாதாரணமாக தாய் அல்லது தந்தை மூலமாக. 3 அம்சங்களை கொண்ட தொடர்பிற்குரிய ஆள் எப்பொழுதும் தயாரானவராய், பழக்கமானவராய், நம்பிக்கையானவராய் இருப்பார். அவர் பிள்ளையின் சமிக்ஜைகளை மென்மையாக கவனித்து, அதனை விளங்குவதற்கு முயற்சித்து, அதற்கான பதில்களை அளிப்பார்.
- ஒரு பிள்ளை பேச ஆரம்பிக்க முன்பே தனது ஐந்து புலன்களையும் கொண்டு, தொடர்பிற்குரிய ஆளின் நடத்தையையும் செயல்களையும் அறிந்துகொள்ளுகின்றது. இதன் மூலம் பெற்ற உணர்வுகள் மூளைக்குள் காலடித்தடங்களை பதிக்கும். பின் வாழ்க்கை நடைமுறையில், பதியப்பட்ட



அந்த உணர்வுகள் அந்த பிள்ளை, இளைஞன், வளரச்சியடைந்தவர் எவ்வாறு தனது அன்றாட வாழ்க்கையில் உணருவார் என்பதில் பிரதபலிக்கும். அப்பொழுது தொடக்கத்தில் அனுபவப்பட்டதன் இணைப்பு தெரியாது. அதனால் தான் ஒரு பிள்ளைக்கு அரவணைப்பு என்பது மிகவும் அவசியமான ஒரு விடயமாகும்.

- சில கைக்குழந்தைகளை அமைதிப்படுத்துவது மிகவும் கடினமாக இருக்கும். சில வேளைகளில் தாயையும் தந்தையையும் ஒரு எல்லைக்குக் கொண்டு வந்து விட்டுவிடும். இப்பேற்பட்ட பிள்ளைகளுக்குத் தான் நம்பிக்கையும் அரவணைப்பும் இன்றியமையாத ஒன்றாகும். இதனை பெற்றார் அவர்களுக்கு வழங்குவதற்காக எந்த நேரத்திலும் சுமைக் குறைத்தலையும் உதவியையும் வெளியிலிருந்து கோருதல் அவசியம்.

# „நான் வலிமை பெறுவதை விரும்புகின்றேன், அதற்காக எனக்கு...
# ...பாசங்காட்டுதலும் கலந்துரையாடலும் தேவை”

கைக்குழந்தையாகிய எனக்கே எனது தாய் அல்லது எனது தந்தை முழு கவனத்தை செலுத்தினால் பிடிக்கும். அது என்னை பராமரிப்பதிலோ, உண்பதன்போதோ அல்லது நான் சூழலை அறியும்போதோ நடைபெற வேண்டும். தாய் அல்லது தந்தை என்னுடன் கதைக்கும் வேளையில், நான் மொழியை அறிகின்றேன், அத்துடன் நானும் எனது அறிவிப்பும் எவ்வாறு முக்கியம் என்பதைத் தெரிந்துகொள்கின்றேன்.

- எனது தொடர்பிற்குரிய ஆளின் முகத்தைப் பார்ப்பது எனக்கு மிகவும் பிடிக்கும், நான் முக அசைவுகளையும் சப்தங்களையும் பாவனை செய்வதை விரும்புகின்றேன்.
- அம்மா அல்லது அப்பா தான் என்ன செய்கிறார் என்பதை எனக்கு, விளக்கமில்லாவிட்டாலும், விளக்குவது பிடிக்கும்.
- நான் புதிய ஒரு விடயத்தைக் கண்டேன் என்றால், எனது தொடர்பிற்குரிய ஆளின் பார்வை நோக்கி எனது பார்வைகள் செல்லும். இது எனக்கு உதவி செய்வதுடன் பாதுகாப்பும் வழங்குகின்றது.
- நான் தொடுகின்ற அல்லது காட்டுகின்ற பல பொருட்களை எனது தொடர்பிற்குரிய ஆள் குறிப்பிடுகின்றார்.
- எனக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு எல்லையற்ற பாசம் காண்பித்தால், நான் பின்பு தனியாகவே இயங்குவேன்.
- என்னைத் தொடர்புகொள்ளும்போது என்னை நோக்கி, எனது கண்களை பாருங்கள்.

- மனித முகங்களை நோக்குவது கைக்குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். இது பெரும்பாலும் பராமரிப்பின்போதும் இடைத் துணி மாற்றும்போதும் நடைபெறுகின்றது. அந்த கைக்குழந்தை தொடர்பிற்குரிய ஆளின் முகத்தை பார்த்தால், அம்முகத்தை பாவனை செய்து, சப்தங்களுடன் கருத்துக்களை வெளிக்கொண்டுவரும், இது அக்குழந்தைக்கு மிகவும் விநோதமாக இருக்கின்றது. தொடர்பிற்குரிய ஆள் அக்குழந்தையின் முக சப்தங்களையும் அசைவுகளையும் கவனத்திற்கொண்டு, அதற்கு பதிலளித்து, அதனை தொடர்ந்தால், இதுவே அப் பிள்ளை மொழியை கற்பதற்கு ஒரு முக்கிய அடிப்படையாகும்.
- செயல்களுடன் அதற்க்கேற்ற சொற்களையும் தாய்மொழியில் பிரயோகித்து வந்தால், அப் பிள்ளைக்கு செயல்களுக்கும் சொற்களுக்கும் உள்ள தொடர்பை உணரக்கூடிதாக இருக்கும். இதன் மூலம் வளர்ச்சிக்கான மேலதிகமான ஒரு அடிப்படை வழங்கப்படுகின்றது.
- பிள்ளை எப்பொழுது சுயமாக இயங்கி அசைந்து, புதிய விடயங்களை கண்டு, அதனை சோதித்துப் பார்க்கிறதோ, அந்த வேளையில் தொடர்பிற்குரிய ஆளின் அன்பை பார்வையினூடாகத் தேடுகின்றது. தனது தொடர்பிற்குரிய ஆள் தான் செய்யவிருக்கும் விடயத்தைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதை அறிய விரும்புகின்றது. முக அசைவுகளின் மூலமும் மொழியின் பிரயோகத்தின் மூலமும் ஒரு கருத்தைப் பெறுகின்றது.

- பிள்ளை பொருட்களை காண்பிக்கத் தொடங்கும் வேளையில், தொடர்பிற்குரிய ஆள் அந்த பொருட்களின் பெயர்களைக் குறித்து, அதனைப் பற்றி பிள்ளையுடன் உரையாடவேண்டும். ஒரு நடந்த சம்பவத்தை பிள்ளை தனது குழந்தைமொழியில் எடுத்துச் சொன்னால், தொடர்பிற்குரிய ஆள் அதனை கருத்தில்கொண்டு, அதனை தாய்மொழியில் அல்லது தந்தைமொழியில் எடுத்துச்சொல்வார். இதன் மூலம் அப் பிள்ளை தான் கருத்தில்கொள்ளப்ப டுகின்றேன் என்ற உணர்வை பெறுகின்றது. இந்த முறையின்படி நிச்சயமாக அம்மொழியைக் கற்றுக்கொள்கின்றது.
- ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தொடர்பிற்குரிய ஆளின் மூலம் முழுமையான பாசத்தையும் உரையாடலையும் அனுபவிக்கின்றப் பிள்ளைகள் தொடர்பும் பரிமாற்றமும் சம்பந்தமானத் தேவைகளைப் பெறுகின்றனர். இதன் காரணத்தாலும் அவர்களுக்கு இயற்கையாகவே உள்ள எதிர்ப்பாரப்பு சுயமாகவே இயங்கவேண்டும் என்ற காரணத்தாலும், ஒரு குறிப்பிட்டக் காலத்திற்கு பின் தரப்பட்ட சூழலில் தமது பொழுதை சுயமாகவே போக்க விரும்புவது மட்டுமல்லாமல், அதனை நிலைநாட்டக்கூட இயலும்.
- பொதுவாகவே பிள்ளைகளை கண் மட்டத்தில் எதிர்நோக்கினால், அப் பிள்ளைக்கு தன்னை அவ் வளர்ச்சியடைந்தவர் கருத்தில்கொண்டு, தன்னுடன் தொடர்பை ஏற்றுக்கொள்ள விரும்புகின்றார் என்ற உணர்வு வரும்.

.



# „நான் வலிமை பெறுவதை விரும்புகின்றேன், அதற்காக எனக்கு... ...ஒரு திடமான நெருங்கிய உறவு தேவை"

என் தாயும் தந்தையும் எனது எதிர்பார்ப்புக்களை ஆரம்பித்திலிருந்து உள்வாங்கி, அதனை சரியான முறையில் வியாக்கியானம் செய்து, உடன-டியாக அதற்கேற்றவாறு செயற்பட்டார்கள். அவர்கள் என்னுடன் மிகவும் மென்மையாக நடந்துகொண்டார்கள். இப்பொழுது எனக்குத் தெரியும், நான் அவர்களை நம்பலாம் என்று. நான் அவர்களுடன் ஒரு திடமான நெருங்கிய உறவை ஏற்படுத்திக்கொண்டுள்ளேன், அத்துடன் இன்றியமையாத நம்பிக்கையையும் வளர்த்துக்கொண்டேன். இதன் காரணத்தால் நான் ஒரு பாதுகாப்பான ஒரு வளையத்திலிருந்து, குடும்பத்திற்கப்பால் புதிய அனுபவங்களை பெற்றுக்கொண்டு, சுயமாக இயங்கவும் இயலும்.

- சில வேளைகளில் நானே என்னை அந்நியப்படுத்துவேன், அப்பொழுது என்னை அவதானமாக புதிய மனிதர்களுடன் பழக்கப்படுத்தினால் மகிழ்ச்சியடைவேன்.
- நான் விசாரனை செய்யவும் கண்டுபிடிக்கவும் விரும்புகின்றேன், அந்த வகையில் எனக்கு அம்மாவிடமும் அப்பாவிடமும் விரைவாகத் திரும்பி செல்லுவது முக்கியம்.
- எனது உறவுப்பாலமாக இயங்கும் ஆள், எனக்காக இருக்கின்றார் என்ற உறுதி எனக்கு அவசியம்.
- நான் யாருடன் இருக்க விரும்புகின்றேன் அல்லது விரும்பவில்லை என்பதை என்னால் தெரியப்படுத்த இயலும். என்னைக் கருத்தில்கொள்ளுங்கள்.
- நான் அந்நியருடன் தனியாக இருக்கவேண்டுமானால், பாதுகாப்பான ஒரு உணர்வை நான் பெறுமட்டும் என்னுடன் நில்லுங்கள்.

- முதலாவது வயதின் முடிவில் குழந்தை தன்னை அந்நியப்படுத்தும்போது, பழக்கப்பட்ட∴ நம்பிக்கையான ஆட்களை பழக்கப்படாது ஆட்களிடமிருந்து வேறுபடுத்தத் தெரியும் என்பதை காட்டுகின்றது. புதிய உறவுப்பாளமாக இயங்கும் ஆளை அப் பிள்ளைக்கு மெதுவாகவும் பக்குவமாகவும் படிப்படியாக பழக்கப்படுத்தவேண்டும்.
- ஆராய்தலின் முதற்படி உறவுப்பாலமாக இயங்கும் ஆளிலிருந்து வெளிநோக்கி வைக்கும்போது, அப் பிள்ளை எந்த நேரத்திலும் அந்த ஆளிடம் திரும்பிச் செல்லும் வாய்ப்பு இருக்கவேண்டும்.
- வாழ்க்கையின் முதல் நாளிலிருந்து உணர்ச்சிகள் பதியப்படுகின்றன, அத்துடன் வாழ்க்கையை சமாளிப்பதற்குத் தேவையான மனிதனின் அடிப்படை அமைப்புகள் முதல் மூன்று வருடங்களில் உருவாகின்றது. அதனால் தாய்மாரும், தந்தைமாரும், அனைத்து தொடர்பிற்குரிய ஆட்களும், அதாவது குடும்பத்திற்குள்ளும் குடும்பத்திற்கப்பாலும் இருப்பவர், நெருங்கிய உறவிற்கும் அதனுடன் இணைந்த பிள்ளையின் உணர்ச்சிகளையும் பெருமளவு கவனத்தில்கொள்வது முக்கியம்.

- ஒரு பிள்ளை வேறு ஆட்களிடமிருந்து பிரிய விரும்பினால், அதனைக் கருத்தில்கொள்ளவேண்டும். இந்த எதிர்பார்ப்புக்களைக் கருத்தில்கொள்ளாவிட்டால், மயக்கம், உதவியின்மை போன்ற உணர்ச்சிகள் நுழைந்து, பிள்ளையின் அடிப்படையுணர்ச்சியை தாக்க ஆரம்பித்துவிடும்.
- பிள்ளையின் பாதுகாப்பை ஒரு குழந்தை பணியாளரிடம் அல்லது பிள்ளைகளை பராமரிக்கும் இடத்திடம் ஒப்படைத்தால், பிள்ளை அந்த புதிய தொடர்பிற்குரிய ஆளிடம் பாதுகாப்பை உணரும்வரை அதின் தாய் அல்லது தந்தை சமூகமளித்தல் அவசியம். ஒரு பிள்ளையை பழக்கப்படுத்துவது என்பது அந்த பிள்ளையினூடாக கொண்டுநடத்தல் அவசியம்.



# „நான் வலிமை பெறுவதை விரும்புகின்றேன், அதற்காக எனக்கு...
# ...எனது தனித்துவத்தை அங்கீகரித்தல் தேவை"

நான் தனித்துவம் வாய்ந்தவன்.˙. வாய்ந்தவள். எனது மூல தனத்தையும் இயற்கை குணாதிசயங்களையும் நான் இவ்வுலகத்திற்கு கொண்டுவந்துள்ளேன். இதன் மூலம் எனது முழு வளர்ச்சியும் நடைபெறுகின்றது. நான் இதனை எனது சூழலைச் சார்ந்து, எனது சுயமான, தனித்துவம் வாய்ந்த, பிரத்தியேகமான முறையில் கையாளுவேன்.

- நீங்கள் எனது தனித்துவத்தை அங்கீகரிப்பதை விரும்புகின்றேன்.
- நீங்கள் என்னை மற்றவர்களுடன் ஒப்பிடுவது எனக்குப் பிடிக்காது.
- எனக்கு எனது வளர்ச்சிக்கு காலம் என்பது தேவை.
- நான் உங்களுக்கு தொல்லைத் தந்துள்ளேன் என்றால், நீங்கள் எனக்கு எடுத்துக் கூறுங்கள், நான் எவ்வாறு உங்களுக்குத் தொல்லை தந்துள்ளேன் என்பது, ஆனால் என்னை ஒரு கேள்விக்குறியாக நிற்பாட்டாதீர்கள்.
- நீங்கள் எனது பலத்தை கண்டறிந்தீர்கள் என்றால், நான் நேசிக்கப்படுகின்றேன் என்ற உணர்வைப் பெற்று, மேலும் என்னை மகிழ்வோடு வளர்த்துக்கொள்வேன்.



- ஒரு பிள்ளையின் தனித்துவத்தை அங்கீகரித்தல் என்பது ஒரு வளர்ச்சியடைந்தவர் ஒரு பொருளைப் போல் தனது விருப்பத்திற்கேற்றவாறு கையாள முடியாது.
- ஒவ்வொரு பிள்ளையின் தனித்துவத்தை அங்கீகரித்தல் என்பது வேறு ஒரு பிள்ளையுடன் ஒப்பிடுதலை, அதாவது ஒருவரைவிட நன்மையாகவோ அல்லது தீமையயாகவோ இருக்கிறது என்பது பார்த்தல், அனுமதிக்கப்படாத ஒன்றாகும். இதனால் ஒரு பிள்ளை பரிசோதனை அ முத்தத்திற்குள்ளாக்கப்படலாம். இதன் காரணத்தால் வளர்ச்சியடைகின்ற உறுதி அமுக்கப்படுகின்றது.
- தனித்துவத்தை அங்கீகரித்தல் என்பது ஒவ்வொரு பிள்ளைக்கும் தனது பிரத்தியேகமான வளர்ச்சிக்கான காலத்தை வழங்குதல் ஆகும். ஒரு பழமொழியின்படி, ஒரு புல்லை மேலே இழுத்தால் மட்டும், அது விரைவாக வளரப்போவதில்லை.
- பிள்ளைச் சம்பந்தபட்டத் தாக்குதலான கருத்துகள் ஒரு பிள்ளையின் மனதில் தான் நிராகரிக்கப்படுகின்றேன் என்ற ஒரு உணர்வை எழுப்பும். பிள்ளை உணரவேண்டும்: „நான் செய்கின்ற செயல்கள் தான் எனது பெற்றாருக்குத் தொல்லைக் கொடுத்து, அவர்களைக் கோபிக்கவைக்கின்றது. அவர்களுக்கு என்மீது கோபமில்லை."
- மதிப்பீடுதல் தான் முன்னிலையில் திகழுகின்றதென்றால், அதுவும் தாய், தந்தை, வேறு தொடர்பிற்குரிய ஆட்களும் பிள்ளையின் பலவீனங்களைக் கணக்கில் எடுக்காமல், அதன் திறமைகளையும் மூவளங்களையும் அவதானித்தால், அப்பிள்ளைக்குள் தன்னை விரும்புகின்றார்கள், ஏற்றுக்கொள்கின்றார்கள் என்ற உணர்வுகள் எழுப்பப்படும்.

# „நான் வலிமை பெறுவதை விரும்புகின்றேன், அதற்காக எனக்கு... ...எனது திறமைகளில் நம்பிக்கை தேவை"

எனது சுய சக்திகளினால் மாற்றங்களை கொண்டு வருவேன் என்பதை நான் நம்புகின்றேன் அத்துடன் உறுதியாகவும் இருக்கின்றேன். இதனை உங்களிடமிருந்து கற்றுக்கொண்டேன். நான் எனது தாயையும் தந்தையையும் நம்பலாம், அவர்கள் என்னைத் தாங்குகின்றார்கள், எனக்கு ஆதரவாக இருக்கின்றார்கள் என்ற உணர்ச்சியைப் பெறுகின்றேன்.

- எனக்கு ஒன்று தேவை என்று நான் சமிக்ஜை செய்தால், உடனடியாக ஒருவர் வந்தால் எனக்கு நன்று.
- நான் என்ன செய்யப்போகின்றேன் என்பதை நான் சுயமாக இயங்கி, அன்றாட வாழ்வில் இணைந்து செயற்பட்டு, கண்டுபிடிக்க விரும்புகின்றேன்.
- நான் ஆராய்வேன், பாவனை செய்வேன், திரும்பவும் ஏற்படுத்துவேன், நடிப்பேன். இதை ஆதரியுங்கள், ஏனென்றால் இதன் மூலம் நான் கற்றுக்கொள்கின்றேன்.
- நான் சுயமாகவே ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டேன், நான் அதனை காண்பிக்க விரும்புகின்றேன்.

- கைக்குழந்தை முதற் மாதங்களில் தனக்கு யாராவது தேவை என்பதை சமிக்ஜை செய்து, தாய் அல்லது தந்தை அல்லது வேறு ஒருவர் அவரிடம் சென்றால், அக்குழந்தை தன்னாலும் மாற்றங்களை ஏற்பத்த இயலும் என்ற உணர்வைப் பெறுகின்றது.
- பிள்ளைக்கு பராமரிப்பபு செயல்களில் இணைந்து செயற்படுவதற்கும், உணவை தேர்வு செய்வதற்கும், அனுமதி பெற்றால், அதற்கு சந்தர்ப்பத்தை வழங்கினால் ஒரு தினத்தை குறிப்பிட்ட நேரத்திற்கு எவ்வாறு கழிக்க விரும்புகின்றது என்பதை கண்டுபிடிக்க வாய்ப்பு அளித்தால், அப்பிள்ளை சுயமாக இயங்குவதில் நம்பிக்கைப் பெறுகின்றது. இவ்வாறான அனுபவங்கள் பிள்ளையின் நம்பிக்கையையும் தன்னம்பிக்கையையும் பலப்படுத்தும்.
- மாதிரியான சிறுகுழந்தை நடவடிக்கைகளாக ஆராய்தல், தேடுதல், கண்டுபிடித்தல், குறிப்பிட்ட சம்பவங்களை மீண்டும் செய்தல், பாவனை செய்தல், நடித்தல் ஆகும். இதன் மூலத் பிள்ளை சுயமாகவே தன்னை வளர்த்துக்கொண்டு, பிரத்தியேகமான கல்விக்கதையை உருவாக்கின்றது. இவ்வகையான கல்வி வெளியிலிருந்து, பிள்ளையின் தரத்தை அறியாமல், ஊட்டப்படும் கல்வியிலிருந்து வேறுபடுகின்றது.
- சுயமாக எதையாவது கண்டுபிடித்தல், எதையாவதைபற்றி கருத்து அலசல், அதனை பற்றி கதைத்தல், அதன் மூலம் சூழலில் அங்கீகாரம் பெறுதல் ஆகியவற்றும் பிள்ளையின் தன்னம்பிக்கையை வளர்க்கின்றது. இதனை அடிப்படையாகக்கொண்டு தான் பிற்காலத்தில் நன்மையான ஒரு சூழலில் அறிவை பெறுவதற்கும், அதனை சுயமாகவே கிரகிக்கவும் தயாராகவும் இருப்பார்.
- சுயமாக இயங்கும் பிள்ளைகளை தமது உலகத்தை ஆராய்வதை எதுவும் தடுக்காது. அவர்கள் தெளிவான ஒரு கற்றல் அவாவை கொண்டவர்கள்.



# „நான் வலிமை பெறுவதை விரும்புகின்றேன், அதற்காக எனக்கு...

# ...வளர்ச்சியைத் தூண்டுவிக்கும் ஒரு சூழல் தேவை"

நான் நன்றாக வளர்ச்சியடைய வேண்டுமென்றால், எனது கற்கும் அவாவை ஆதரிப்பதற்கு எனக்கு பாசங்காட்டுதலும் தூண்டுதலான ஒரு சூழலும் அவசியம். என்னைச் சுற்றி பிள்ளைகளும் வளர்ச்சியடைந்தவர்களும் இருக்கவேண்டும், எனது முறையில் நான் எனது பொழுதைப்போக்குவதற்காகவும் பரிசோதனை செய்வதற்காகவும் எனக்கு சாதனங்கள் தேவை.

- நான் எனது அனைத்து புலன்களையும் கூர்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் விரும்புகின்றேன். அதற்கான சந்தர்ப்பங்களை எனக்கு வழங்குங்கள்.
- அன்றாட வாழ்க்கையிலிருந்து சாதனங்களை எனக்குத் தாருங்கள். நான் ஆர்வமாக இருக்கின்றேன், ஆராய விரும்புகின்றேன்.
- எனது புலன்களையும், என்னுடன் கூடப் பிறந்த அசைவதற்கான எதிர்பகாப்பும் விருத்தியடைய ஒரு சூழலை எனக்கு அவசியம். அப்படியென்றால் நான் எனது சுய சக்திகளினால் என்னை வளர்த்துக்கொள்வேன்.
- என்னுடன் கதையுங்கள், சிரியுங்கள், நேரம் செலவளியுங்கள். நான் வேறு வளர்ச்சியடைந்தவர்களுடனும் பிள்ளைகளுடனும் சேர்ந்து இருப்பதற்கான வழிகளை அமையுங்கள்.
- நான் புதிய விடயங்களை கண்டுபிடித்துக்கொண்டிருந்தாலும் அல்லது வேறு வளர்ச்சியடைந்தவர்களுடனும் பிள்ளைகளுடனும் சேர்ந்து இருந்தாலும், என் அருகாமையில் ஒரு பழக்கமாள ஆள் இருத்தல் என்பது முக்கியம்.
- எனது ஆர்வத்தைத் தூண்டுங்கள், நான் எனது சூழலை சுயமாகவே கண்டுபிடிக்கின்றேன்.

- வாழ்க்கையின் முதற்பகுதியில் ஒரு பிள்ளைத் தன்னை பிடிப்பதையும், தாங்குவதையும், புலன்களினூடாக பெறப்படும் கருத்தங்களிற்கு முன் பாதுகாப்பதையும் எதிர்ப்பார்க்கின்றது. சற்று வளரச்சியடைந்த பருவத்தில் அதற்கு வளர்வதற்கான ஒரு பொருத்தமான சூழல் அவசியம், அச்சூழல் அனைத்து புலன்களையும் - கேட்டல், பார்த்தல், மணத்தல், சுவைத்தல், தொடுதல் - தூண்டி, அசையவிடுவதாக அமைதல்வேண்டும். கைக்குழந்தையினதும் சிறு பிள்ளையினதும் வளர்ச்சியைத் தூண்டும் ஒரு சூழலில் தொலைகாட்சியும் கணணியும் இருக்கக்கூடாது.
- எந்த சூழலில் ஒரு பிள்ளை பிறந்தாலும், அதன் ஆர்வத்தைத் தூண்டும், அதன் சுவாரசியத்திற்கு ஏற்றவாறு தெரிவு செய்து, சோதித்துப் பார்ப்பதற்கான சாதனங்கள் எப்பவும் உள்ளன. ஒவ்வொரு வீட்டிலுமுள்ள தேவையற்றப் பொருட்கள் பிள்ளையின் கற்பனையைத் தூண்டி, படைப்புத்திறணைத் தூண்டும்.

- புலன்களைத் தூண்டி, அசைவுகளை சாத்தியமாக்கும் சூழலில் ஒரு பிள்ளைக்கு தானாகவே வளர்ச்சிக்கேற்ற அடுத்த படி ஆயத்தமாகிவிடும், ஊம் எப்பொழுது பிள்ளை சுய சக்தியினால் நிமிர்ந்து இருப்பது என்பதும், எப்பொழுது சுயமாக முதல் காலடி எடுத்து வைப்பது என்பதும்.
- வளர்வதற்கு பொருத்தமான சூழலுக்குள் முதலில் தாயும் தந்தையும் அடங்குவர். அவர்கள் பிள்ளையை கையில் தாலாட்டுவர், அவர்கள் கதைப்பர், சிரிப்பர், பிள்ளையுடன் சேர்ந்து மகிழ்ச்சியடைவர், பாடுவர், ஆடுவர், இசையைக் கேட்கவிடுவர், பிள்ளையுடன் சித்திரப்புத்தகங்கள் பார்ப்பர், கதைகள் கூறுவர், சுயமாக உலகத்தைக் கண்டிறிவதற்கதன இடவசதியினை அமைப்பர். நாளடவில் அப்பிள்ளை புதிய தொடர்பிற்குரிய ஆட்களையும் பிள்ளைகளையும் சந்தித்துப் பழகி, அவர்களுடன் கருத்துக்களை பரிமாற்றிக்கொள்ளவேண்டும். வீட்டிலிருந்தாலோ அல்லது அந்நிய சூழலலாக இருந்தாலோ, பிள்ளை பல வகைப்பட்ட மக்களுடன் பழக விரும்பும்.
- ஒரு புதிய சூழலையும், வேறு மக்களையும் ஆராயும்போதும் பழகும்போதும், பழக்கப்பட்ட தொடர்பிற்குரிய ஆளுடன் தொடர்பு இருப்பது அவசியம். அவர்களின் சமூகம் அப்பிள்ளைக்கு ஒரு திடமான அத்திவாரமாகத் திகழ்வதோடு, புதிய விடயங்களை பார்ப்பதற்கும் பழக்கமற்ற விடயங்களை கண்டுபிடிக்கவும் வாய்ப்பளிக்கின்றது.
- தூண்டுதலான சூழலலின் மூலம் தாயும் தந்தையும் பிள்ளையின் ஆர்வத்தைத் தூண்டுவர். இதன் மூலம்அதன் வளர்ச்சியைத் தூண்டுவர். பின்பு, வெளியிலிருந்து யாரும் செயல்கள் செய்வதற்கான வாய்ப்புக்களை அளிப்பதற்காக காத்திருக்காமல், அப்பிள்ளை சுய முயற்சியாலே செயல்களை ஆரம்பிக்கும்.



# „நான் வலிமை பெறுவதை விரும்புகிறேன், அதற்காக எனக்கு... ...திசை நோக்குதல் தேவை”

நான் எனது அன்றாட வாழ்வில் திசை நோக்குவதற்காகவும் சரியான முறையில் வாழ்வதற்காகவும், எனக்காக இருக்கும் தொடர்பிற்குரிய ஆட்கள் தேவை. எனக்கு திடமான நாளமைப்புக்கள் அவசியம், எவ்வாறு நாம் சேர்ந்து வாழ்வதென்பதைக் குறிக்கும் விதிகளும் அவசியம், சடங்குகளும் அவசியம். இதன் மூலம் நான் வலிமை பெறுவேன்.

- அதிஸ்டவசமாக நான் முதற்மாதங்களில் தாயிலும் தந்தையிலும் திசை நோக்கலாம்.
- நாளாந்த அனுபவங்கள் எனது மூளையில் பதியப்படுகின்றன.
- நான் தொட்டு, மணப்பதற்கு எனக்கு ஒரு பழக்கமான பொருள் தேவை. இது என்னை அமைதிப்படுத்தி, எனக்கு பாதுகாப்பை வழங்குகின்றது.
- நீங்கள் என்னை அன்றாட வாழ்க்கையின் செயற்பாடுகளில் இணைத்துக்கொண்டால், நாளடவில் நான் இணைந்து செயற்படுவதுடன், எனக்கு அதில் ஆர்வமும் வரும்.
- ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு தினம் எனக்கு பாதுகாப்பும் வழங்கும்.
- எனது வளர்ச்சிக்குப் பொருந்திய இன்றியமையாத ஒரு கட்டமைப்பிற்கு நான் முக்கியத்துவம் வழங்குகின்றேன், அதற்குள் நான் திசை நோக்கி, சுதந்திரமாக அசைவேன்.
- நான் „இல்லை”, „நான்” என்று சொல்வதற்கு ஆரம்பிற்கின்றேன். எனக்கு உறுதுணையாக இருங்கள், நான் சுதந்திரமாக இயங்குவதை வளர்த்துக்கொள்வதற்றும், என்னை நிரூபிப்பதற்கும் எனக்கு காலத்தை வழங்குங்கள்.

- பிறப்பிற்கு பின், பிறந்த அப்பிள்ளை ஒரு பழக்கமற்ற சூழலுக்குள் வருகின்றது. அது எவ்வாறு பகலும் இரவுமாகின்றது என்பதை அறிகின்றது. பழக்கமற்ற சப்தங்களையும், புதிய மணங்களையும் அது அறிகின்றது. ஆனால் தாயும் தந்தையும் எப்பொழுதும் இருப்பார்கள். இந்த புதிய வாழ்க்கையில் அவர்களின் சமூகமே திசை நோக்குவதாக அமைகின்றது.
- ஒழுங்குமுறையான பாசங்காட்டுதலும், தொடர்ந்து திரும்பி திரும்பி வரும் சம்பவங்களும், பராமரிப்பதிலும் உணவூட்டுவதலிலும் நாளாந்த அனுபவங்கள் போன்றவை, கைக்குழந்தையின், சிறுகுழந்தையின் மூளையில் பதியப்படுகின்றன.
- கைக்குழந்தை ஒரேமாதிரியான செயல்களை கண்டுபிடிக்கின்றது – பெருவிரலில் சூப்புதல், மூக்கின் நுனியைத் தடவுதல், ஒரு பொம்மையை கைக்குள் வைத்திருத்தல். இவ்வாறானது அதற்கு அமைதியையும் திசை நோக்குதலையும் வழங்குகின்றது.
- அன்றாட வாழ்க்கையின் செயற்பாடுகள், அதாவது இடைத் துணி மாற்றுதல், குளித்தல், ஆடை அணிதல், -களைதல், ஒரு அமைதியான, உறுதியான முறையில், பிள்ளை செய்யும் சமிக்ஜையின் மூலம் எதிர்நோக்கவேண்டும். இதன் மூலம் அப்பிள்ளைக்கு உதவி செய்வதற்கும், அனுபவிப்பதற்குமான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

- பெருமளவில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு தினம், அதாவது உணவு, பொழுதுபோக்கு, தூக்கம், அதனுடன் இணைந்த சடங்குகள் - தூங்குவதற்காக கூறப்படும் கதைகள் போன்றவை - பிள்ளைக்கு ஒரு நம்பிக்கையான சூழலை ஏற்படுத்திக்கொடுக்கின்றது.
- இரண்டாவது வயதில் குடும்பத்தில் உறுதியான மரபுகள் அவசியம். முதல் வயதின் நிகழ்வுகள், சடங்குகள், அமைப்புகள், கல்வியியல் ரீதியா இன்றியமையாததாகின்றது, அது பிள்ளையின் வயதுக்கேற்றவாறு மாற்றமடையப்படும்.
- திறமை விருத்தியடையும்போதும், நான் என்ற ஆத்ம விழிப்புணர்வை பெறும்போதும் அப்பிள்ளை இல்லை சொல்வதையும் ஆம் சொல்வதையும் அறிகின்றது. அது தனக்கு கொடுக்கப்பட்ட இடத்தை பெருதுபடுத்தி, தனது பெற்றாரைத் தூண்டி, அவர்களால் அளிக்கப்படும் பின் விளைவுகளைளும் பரிசோதிக்கின்றது. விதிகளை பின்பற்றுவதே ஒரு முக்கிய கல்விமுறையாகும் என்பது கருத்தில்கொள்ளவேண்டும். இதற்கு காலமும் தேவை, தேவைப்பட்டால் பின் விளைவுகளும் இருக்கலாம்.
  இப்பொழுது ஆரம்பிக்கின்ற சுயாட்சிப்பகுதி ஆளுமை வளர்ச்சிக்கு ஒரு சாதாரண, முக்கிய காலப்பகுதியாகும், இதற்கு திசை நோக்கும், உறுதுணையாக இருக்கும் பெற்றார் சார்பிலான „எல்லைக்குள் சுதந்திரம;" அவசியம், அத்துடன் இது பிள்ளையின் சுயாட்சியும் தூண்டப்படவேண்டும்.



# விளக்கங்கள்

சிறப்பான ஒரு வளர்ச்சிக்கு ஒவ்வொரு கைக்குழந்தைக்கும், ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் குறைந்தது ஒரு தொடர்பிற்குரிய ஆள் தேவை, இவர் மூலம் திடமான தொடர்பு பெறுவதற்கு வாய்ப்புண்டு. இந்த தொடர்பிற்குரிய ஆள் கல்வியியலானத் தன்மையை உள்ளவர், இத்தன்மை ஒரு உன்னிப்பானத் தன்மை உள்ளடக்கியது. குழந்தையின் தனித்துவம் இதனை கையாளுகின்றது, அத்துடன் பிள்ளைக்கு சுயமான செயல்களை மேற்கொள்வதற்கான வழி வகுக்கின்றது.

கடந்த 30 வருடங்களாக அறிவியல் ஆராய்ச்சி மூலம் பெற்ற சிந்தனைகள், இந்த கையேட்டிலுள்ள எட்டு வகையான தகவல்களுக்கும் அடிப்படையாகும். ஒரு குழந்தை வலிமை பெறுவதற்கு, கர்ப்பத்தில் இருந்து முதல் மூன்று வயதுவரை என்ன அவசியம் என்பதை, இந்த தகவல்கள் அறியத்தருக்கின்றன.

உலகத்திலுள்ள பல வகைப்பட்ட கலாச்சாரங்களிலும் நாடுகளிலும் ஆரம்ப வளர்ச்சிக்கான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் பெற்ற விளைவுகள் அனைத்து குழந்தைகளுக்கும், பொருந்தும் அவர்கள் எங்கு வளர்கின்றார்கள் என்பது முக்கியமில்லை.

ஒரு கைக்குழந்தை முதல் நொடிப் பொழுதிலிருந்து மனிதர்களுடன் தொடர்புகொள்ள விரும்புகின்றது. தொடர்புகளின் மூலம் ஒரு பிள்ளையின் பராமரிப்பு, வளர்ப்பு, சுயகல்வி போன்றவை முதற்முதலில் தொடர்புகளினூடாக நடைபெறுகின்றன என்பதை புதிய சிந்தனைகள் காண்பிக்கின்றன. இன்று இந்த மூன்று சொற்களும் கைக்குழந்தை – சிறுபிள்ளைகல்வியியலில் பதியப்பட்டுள்ளன. கலந்துரையாடல்களின்போது இச்சொற்களினால், எவற்றைப்பற்றி கதைக்கப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

பராமரிப்பு என்பதற்குள் பாசங்காட்டுதல், உணவூட்டுதல், பராமரிப்பு அடங்குகின்றன. நுண்ணிய பராமரிப்பின்மூலம் யின்மூலம் ஒரு பிள்ளைக்கு நாம் திடமான நெருங்கிய உறவை உருவாக்கின்றோம், அத்துடன் உடல்ரீதியான பாதுகாப்பும் மனரீதியான பாதுகாப்பும் வழங்குகின்றோம்.

வளர்ப்பு என்பதற்குள் தொடர்பிற்குரிய ஆளால் கையாளப்படுகின்ற செயல்களைத் ஒரு பிள்ளையின் தனித்துவமான, சமூக-உணர்ச்சிப்பூர்வமான, உடல்ரீதியான, அறிவுரீதியான வளர்ச்சிமுறைகள் துாண்டுதலும், அதன் மேல் வளர்ச்சியைத் தொடர்விற்கிறதுமாகும். இந்த செயல்களுக்குள் ஒரு நெருக்கமான, விரிவான சூழலை ஏற்படுத்திகொள்வதும் அடங்குகின்றது. வளர்ப்பின் மூலம் ஒரு பிள்ளைக்குத் தனது தனித்துவமானத் திறமைகளை விரிவுப்படுத்துவதற்கான அத்திவாரத்தை வழங்குகின்றோம். அது தனது சுய சவால்களை சுயமாகவே தீர்மாணித்து, தன்னை வித்தியாசப்படுத்தி கையாளவேண்டும்.

தமது பிள்ளைகளுக்கான பராமரிப்பையும் வளர்ப்பையும் பெற்றார் திடப்படுத்தினால், அதனால் பிள்ளையின் சுயகல்வி வளர்வதற்கான சக்திகளுக்கு அடிப்படையாக அமையும்: இதன் காரணத்தாலேயே அப்பிள்ளை தனது சமூக சூழலில் சுயமாகவே வளர்த்துக்கொள்ளலாம்.

கைக்குழந்தை, சிறுகுழந்தைப்பருவத்தில் அனைத்துப் புலன்களினூடாகவும் கல்வி என்பது நடைபெறுகின்றது. அந்த பிள்ளை சுயமாகவே உலகத்தை புரிகின்றது. மீண்டும் மீண்டும் பெறுகின்ற அனுபவங்கள், உணர்ச்சிகளுடனும் உணர்வுகளுடனும் இணைந்து, பதியப்படுகின்றன.
ஒரு பிள்ளை எதிர்காலத்தில் எவ்வாறு தன்னை, மற்ற மனிதர்களுடனுள்ள தனது தொடர்புகளை, தனது உலகத்தை அனுபவிக்கின்றது, விளங்கிகொள்கின்றது, கையாளுகின்றது என்பதற்கு இப்பேற்பட்டக் கல்வி – சுயகல்வி என்றழைப்பர் - அடிப்படையாக அமைகின்றது.

# தொடர்புமூலம் வலிமை பெறுதல்: தாய், தந்தைக்கு என்ன அவசியம்?

### சிலவற்றை தாய்மாரும் தந்தைமாரும் கொண்டு வருகின்றார்கள்

தமது பழக்கத்தின் மூலம்பிள்ளையை கையாளுவதில், தாய்மாரும் தந்தைமாரும் இயற்கையானத் திறமைகளைக் கொண்டவர்கள்

- இவர்கள் தமது முகத்தை ஏறத்தாழ 20 செ.மீ, தூரத்தில் வைத்திருப்பார்கள் - இதன்மூலம் ஒரு கைக்குழந்தை இவர்களை தெளிவாகக் காணமுடிகின்றது.
- இவர்கள் சிறுகுழந்தையின் சப்தங்களை பாவனை செய்வார்கள், இராகத்தில் பேசுவார்கள் - இது மொழிவளர்ச்சிக்கு முக்கியம்.
- பிள்ளையின் ரம்மியமானத் தன்மை இவர்களுக்குள் அக்கறையைத் தோற்றுவிற்கின்றது.

### தாய்மாருக்கும் தந்தைமாருக்கும் காலம் அவசியம்

பெற்றாரின் பலவகையான செயல்களுக்குள் தம்மை வளர்த்துகொள்வதற்கான நேரம். பிள்ளையுடன் பழக்கப்படுவதற்காகவும், பிள்ளையின் தனித்துவத்தை மென்மேலும் அறிந்துகொள்வதற்கான நேரமும்.

- ஒவ்வொரு பிள்ளையும் தனக்கு தேவையான நேரத்தை தன் பெற்றாரிடமிருந்து பெறுகின்றது. பிள்ளைக்குப் பிள்ளை இந்த நேரம் வித்தியாசப்படும், அதாவது முதல் பிள்ளையாக இருக்கலாம் அல்லது சகோதரர்கள் இருக்கலாம்.
- இந்த சவாலின் சமாளிப்பதற்கு தாய்க்கும் தந்தைக்குமான நேரமும் அவசியம், அதாவாது தங்களது தனித்துவங்களை பேணுவத்றகான நேரம்.
- தொடர்பை வலியுறுத்தும் உதவி மகிழ்ச்சியையும், ஆர்வத்தையும், திருப்தியையும் தரும்.

### தாய்மாருக்கும் தந்தைமாருக்கும் மதிப்பான ஒரு சூழலும் தைரியமும் தேவை

கைக்குழந்தைகளையும் சிறுபிள்ளைகளையும் வளர்ப்பதென்பது மனக்குளிர்ச்சியான, மகிழ்வான செயலாகும். ஆனால் இதுவே தாய்மாருக்கும் தந்தைமாருக்கும் சில சமயங்களில் சவாலாகும். தூக்கம் குறையும். பெற்றாருக்கு தமது பிள்ளை ஏன் அழுகின்றது, அதனை எப்படி ஆறதல்படுத்த முடியும் என்று உடனடியாக விளங்காத காரணத்தால், அவர்களுக்கு உதவிற்கு, தைரியபடுத்த, பாரத்தை இறக்க ஒரு புரிந்துணர்வான சூழல் அவசியம்.

### தாய்மாருக்கும் தந்தைமாருக்கும் வெளித்தொடர்புகள் அவசியம்

வெளித்தொடர்புகள் கருத்து பரிமாற்றங்களுக்கு, தகவல்கள், சுமைக்குறைத்தல், திறமையான உதவிற்கான விநியோகங்கள் இடம் வகுக்கின்றன. வேறு தாய’மாருடனும் தந்தைமாருடனும் வெளிப்படையான, சுயேட்சையமான கலந்துரையாடல்கள் உதவும்.

புரிந்துணர்வான சூழலில் தாய்மாரும் தந்தைமாரும் தமது பராமரிப்பு திறணிலும் வளர்ப்புத்திறணிலும் நம்பிக்கைப் பெறுவர். தமது மனம் ஒரு சூழ்நிலையைப்பற்றி என்ன கூறுகின்றது என்பதை கற்கின்றார்கள். குடும்ப சூழ்நிலைக்கேற்றவாறு பாரமிறக்குதலும் வெளிவே பெறக்கூடிய நாளாந்த பிள்ளை பராமரிப்பிற்கும் உதவியாக அமையும்.

என்ன செய்கிறது என்று தெரியாமல் இருக்கும் சூழ்நிலைகள் அல்லது பெற்றார் ஓர் எல்லைக்கு வந்துவிட்டால், இவர்கள் தகவல்கள் தரும், பாரம் குறைக்கும் நிபுணர்களை தொடர்புகொள்ளலாம். கடினமான காலத்தில் இவர்கள் தாய்மாரையும் தந்தைமாரையும் சிறப்பான முறையில் பக்கபலமாக இருப்பார்கள்.

# பெற்றார்கல்வி – சுவிற்சலாந்து

# பெற்றாராக இருப்பதற்கு சிறந்த ஆதரவு

திடீரென்று குழந்தை பிறந்துவிட்டது. முதல் இருந்தமாதிரி இப்பொழுது எதுவும் இல்லை.

கர்ப்பத்தின்போது அனைத்தும் தொலைவிலிருந்தது, கைக்கெட்டாத வகையிலிருந்தது. ஆனால் இப்பொழுது? அனைத்தும் மாற்றம் பெறுகின்றது. முழு வாழ்க்கை, தொழில், சூழல். குழந்தை ரம்மியமாக இருக்கின்றது, ஆனால் அது கூடிய நேரத்திற்கு அழுதால், அதனை ஆறுதல்படுத்த முடியாவிட்டால், நாங்கள் எங்கள் எல்லைக்கு வந்துவிட்டால் என்ன நடக்கும்? நல்ல பெற்றாராகத் திகழ்வதற்கு நாங்கள் என்ன செய்தல் அவசியம்?

பெற்றார்கல்வி என்பது பல வினாக்களுக்கு பதிலளிக்கும், பெற்றார்களுக்குத் தமது திறமைகளைச் சுட்டிக்காட்டும், அவர்களுக்கு தைரியத்தை வழங்கும், வெளிச் சூழலலுடன் தொடர்பை ஏற்படுத்தும், புதிய விடயங்களைத் தூண்டுவிற்கும், அன்றாட வாழ்க்கையின் வளர்ப்பு முறையில் பெற்றார்கள் வலியுறுத்தப்படுகின்றார்கள். பெற்றார்கல்வி என்பது பலதரபட்டது: தனிநிகழ்வுகள், பல பாகங்களாக வகுக்கப்பட்ட பயிற்சி நெறிகள், கலந்துரையாடல்கள், குழக்களுக்கான நிகழ்வுகள், ஆலோசனையளிப்பவர், இணையத்தள விநியோகங்கள் போன்றவை பெற்றாரின் எதிபார்புக்களை மேற்கொள்கின்றன. சுவிற்சலாந்தில் 1000 பிரதம அமைப்புக்கள் பெற்றார்கல்வி வழங்குகின்றன, அந்த வகையில் பெற்றார்கல்வி சுவிற்சலாந்து பயிற்சி, பொதுசனத் தொடர்பு வேலை, தரம் சம்பந்தபட்ட கேள்விகள் மேற்கொள்கின்றது. பெற்றார்கல்வி சுவிற்சலாந்து விரிவான தகவல்களை நிகழ்வுகளினூடாக வழங்குகின்றது, வெளியீடுகள், பெற்றாருக்கான, நிபுணர்களுக்கான, ஊடகங்களுக்கான பொதுசனத் தொடர்பு வேலைகள் போன்றவற்றை நடாத்துகின்றது.

உங்கள் பிரதேசத்தில் விநியோகங்கள் அல்லது பயிற்சி நெறிகள் சம்பந்தமான தகவல்களைப் பெறுங்கள்: www.elternbildung.ch

# ஜாகோப்ஸ் தர்ம ஸ்தாபனம

சூரிச்சில் அமைந்துள்ள தனிப்பட்ட நிறுவனமான ஜாகோப்ஸ் தர்ம ஸ்தாபனம் 1988 ஆம் அண்டு க்லெளஸ் ஜெ. ஜாகோப்ஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது. அக்காலத்திலிருந்து „Productive Youth Development" (PYD) என்ற விடயத்தை மேற்கொள்கின்றது, அத்துடன் பல ஆண்டுகளாக அறிவியல் வளர்ச்சியிலும், குறிப்பான கற்பனை சம்பந்தமான நிகழ்வுகளிலும், அதனை பிள்ளைகளினும் இளையோரின் வளர்ச்சிற்காக நடைமுறைபடுத்தலிலும், அனுபவங்களை பெற்றுள்ளது. Productive Youth Development என்பதில் இந்நிறுவனம் பிள்ளைகளின், இளையோரின் வளர்ச்சிக் கருதிய எண்ணங்களை உள்ளடக்குகின்றது, இது பிள்ளைகளின், இளையோரின் வளரச்சிவாய்ப்பை வலியுறுத்துகின்றது. இந்நிறுவனம் தனது முறைகளிலும் நடைமுறைகளிலும் மிகச் சிறப்பான அறிவியல், ஆதரங்கள் போன்றவற்றை இன்றியமைததாகக் கருதுகின்றது. ஜாகோப்ஸ் பல்கலைகழகம் பிரேமெனிற்கு 200 கோடி யூரோக்கள் (2006) செலவுசெய்து, தனிபட்ட முறையில் புதிய அம்சங்களை உருவாக்கியது.

பிள்ளைகளின் ஆரம்ப வளர்ச்சி பிள்கால வளரச்சிக்கு அடிப்படையாக அமைவதால், பிள்ளையின் ஆரம்ப வளர்ச்சிக்கல்வியும் பராமரித்தலும் ஜாயோப்ஸ் ஸ்தாபணம் மிக முக்கியமாகக் கருதுகின்றது. இக்காரணத்தால் இந்த பகுதியில் பல ஆண்டுகளாக இந்நிறுவனம் யேர்மன் மொழி பேசப்படும் பிரதேசங்களில் ஆராய்ச்சி- கற்பனைதிட்டங்கள் செய்து வருகின்றது. பிள்ளையின் முதல் வயதுகளில் பெற்றாரின், குடும்பத்தின் பங்கு, அதன் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இதன் காரணத்தால் இந்நிறுவனம் ஆரம்ப வளர்ச்சிக்கானத் திட்டங்களில் முழு குடும்பத்தையும் உள்வாங்குகின்றது, உதாரணத்திற்கு பெற்றாரின் வளரப்புத்திறண், குறிப்பாக சாதகமற்ற நிலையிலுள்ள, கல்வியில்லாத குடும்பத்தினர், திடப்படுத்தப்படுகின்றது. தொடர்புமூலம் வலிமை பெறுதல் என்ற பிரச்சாரம் இந்த திசையில் ஒரு முக்கிய வழியாக அமைகின்றது.

# பிரியோசனமான இணையத்தளப்பக்கங்கள்

| | |
|---|---|
| பெற்றார்கல்வி நிகழ்வுகள் | www.elternbildung.ch |
| தாய்தாருக்கும் தந்தைமாருக்குமான ஆலோசனை | www.muetterberatung.ch |
| பெற்றாருக்கான அவசர அழைப்பிதல | www.elternnotruf.ch, |
| தொலைபேசி இலக்கம்: | 044 261 88 66 |
| பிள்ளைப்பாதுகாப்பு சுவிற்சலாந்து | www.kinderschutz.ch |
| ப்ரோ யுவென்றுர்ற்ற | www.projuventute.ch |
| ப்ரோ குடும்பத்தினர | www.profamilia.ch |
| பாலர் பள்ளிக் கழகம் சுவிற்சலாந்து | www.kitas.ch |
| குடும்ப அமைப்புக்கள் | www.muetterzentrum.ch |
| பெற்றாருக்கான ஒழுங்கமைப்பு | www.sveo.ch |
| தொழிலையும் குடும்பத்தையும் இணைத்தல் | www.plusplus.ch |
| தனித்து வளர்ப்பது | www.einelternfamilie.ch |
| தந்தைமார் | www.vaeter.ch |
| பிள்ளைகளுக்கான அமைப்பு சுவிற்சலாந்து | www.kinderlobby.ch |
| வரவு செலவு திட்டம் சம்பந்தபட்ட ஆலோசனை | www.budgetberatung.ch |
| பலவகைப்பட்ட கலாச்சாரத்தைச் சேர்ந்த குடும்பங்கள் | www.binational.ch |
| பலவகைப்பட்ட கேள்விகள | www.familienhandbuch.ch |
| பெற்றாரை வலியுறுத்தும் பரிசோதனை | www.elternbildung.zh.ch/elternstaerkentest |
| ஒரு நாள் குடும்பம் சுவிற்சலாந்து | www.tagesfamilien.ch |
| இரட்டைக்குழந்தைகள் | www.zwillinge.ch |
| அழும் குழந்தைகள் | www.schreibabyhilfe.ch |
| ஆபத்திலிருக்கும் பெற்றார் | www.muetterhilfe.ch |
| பிள்ளைகள், பலவந்தம் போன்றவற்றிகான நிறுவனம் | www.kinderundgewalt.ch |

www.elternbildung.ch என்ற இணையத்தளத்தில் வாசிப்பதற்கேற்ற நூல்களின் பட்டியலை காணலாம்.


அச்சு

சிந்தனையும், முழுமையான நேறிபடுத்தலும், நடைமுறைபடுத்தலும்: பெற்றார்கல்வி, சுவிற்சலாந்து, சூரிச்
நேறிபடுத்தலும் பந்திகளும்: வடதென் சுவிற்சலாந்து, f-netz.ch, கற்றீன் கெல்லர்-சூமாகர், மார்கிட் குன்கர்பூலர்-ரேபர்,
ஊலி க்ரோபிலி, லூாப்சிங்கன்
வடிவமைப்பு: பேற்றர் லிஸ்ரென்ஸ்ரைன், சூரிச்
மொழிபெயர்ப்பு: இன்ரெர்சேர்வ் குழு, சூரிச்
படங்கள்: விளம்பர முகவர் சூல்ட்ச, வால்ற்றர், சாகெல், நூர்ன்பேர்க்
பதிப்பு: ற்ரீனர் குழு, சுவீஸ்
நிபுணத்துவம் வாய்ந்த சான்றிதழ்: கலாநிதி யோவாகீம் பென்செல், கலாநிதி ரூடிகர் பொஸ்ர், கலாநிதி யூலியா பேர்கிச்
கையேட்டில் இணைந்து வேலை செய்தவர்கள்: மார்லீஸ் பீரி, ரீற்றா பீரி, சபீனெ புரன்னர், அடல்ஹைட் டேபுருன்னர், விவியானே வென்ற்றர், பியா வொன்ற்றானா, மார்கிட் கேர்ட்சன், சந்திரோ யூலியானி, கஸ்ரோன் ஹாஸ், டானியெல் ஹாபெக்கர், மடெலைனெ லூாடி, மாயா முல்லெ, எலிசாபெத் சினைடர், அன்டி ட்சும்பெர்லின், ஊர்ச் சீக்லர்


தனிப் பிரசுர உரிமை 2010

Tamilisch
August 2010

# BONDS MAKE YOU STRONG

ஜாகோப்ஸ் ஸ்தாபனத்துடன் இணைந்த பேற்றார்கல்வி சுவிற்சிற்கான ஒரு துணைத்திட்டம்


| | |
|---|---|
| Jacobs Foundation<br>Seefeldquai 17<br>P.O. Box<br>CH-8034 Zürich<br>தெலைபேசி: +41 44 388 61 26<br>தொலை நகல்: +41 44 388 61 37 | Elternbildung CH<br>Steinwiesstrasse 2<br>CH-8032 Zürich<br><br>+41 44 253 60 60<br>+41 44 253 60 66 |
| www.jacobsfoundation.org | info@elternbildung.ch<br>www.elternbildung.ch |


JACOBS FOUNDATION

elternbildung ch
formation des parents ch
formazione dei genitori ch


„தொடர்புமூலம் வலிமை பெறுதல்" என்ற பிரச்சாரத்திற்கு ஒத்துழைத்த பின்வரும் அமைப்புக்களுக்கு நாம் நன்றி கூறுகின்றோம்: அரசாங்கத்தின் குடியேற்ற அமைப்பு, சமூகக் காப்புறுதிக்கான அமைப்பு, SevenOne Media (சுவிற்சலாந்து) குழு, விக்ரொரினொக்ஸ், சூக் பிரதேசம் ஆதரவளித்தது. கூட்டமைப்பின் ஒன்றுபடுத்தலுக்கான பற்றின் மூலம் ஆதரவளிக்கப்படுகின்றது.

Supported by the Canton of Zug

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Justiz- und Polizeidepartement EJPD
Département fédéral de justice et police DFJP
**Bundesamt für Migration BFM**
**Office fédéral des migrations ODM**